இயேசு அழைக்கிறார் (2)
ஆவலாய் உன்னை தம் கரங்கள் நீட்டியே
இயேசு அழைக்கிறார்- இயேசு அழைக்கிறார்

எத்துன்ப நேரத்திலும், ஆறுதல்
உனக்களிப்பார்
என்றுணர்ந்து நீயும் இயேசுவை நோக்கினால்
எல்லையில்லா இன்பம் பெற்றிடுவாய் -
இயேசு

கண்ணீரெல்லாம் துடைப்பார்,கண்மணிபோல்
காப்பார்
கார்மேகம் போல கஷ்டங்கள் வந்தாலும்
கருத்துடன் உன்னைக் காத்திடவே –
இயேசு

சகல வியாதியையும் குணமாக்க வல்லவராம்
யாராயிருந்தாலும் பேதங்கள் இன்றியே
கிருபையாய் அன்பை அளித்திடவே -
இயேசு